# ARCHDIOCESAN COMMISSION FOR TAMIL SPEAKING








Most Rev William Goh, DD
Archbishop of Singapore








# THE CONSTITUTION

**ARCHDIOCESAN COMMISSION FOR TAMIL SPEAKING**
*Catholic Archdiocesan Education Centre*
*#03-01A, Highland Road, Singapore 549102.*
*Email: acts.secretariat@catholic.org.sg*
*Website: acts.catholic.sg*

THE TITULAR ROMAN CATHOLIC ARCHBISHOP OF SINGAPORE
Archbishop's House
31 Victoria Street
Singapore 187997
Tel +65 6895 1555
Fax +65 6895 1551
www.catholic.org.sg

# DECREE

With pastoral concern and care for the Tamil speaking who may be baptised or otherwise, who are domicile or quasi-domicile in the Archdiocese of Singapore, the Archbishop of Singapore has established the Archdiocesan Commission for Tamil Speaking (ACTS) to reach out to the Tamil speaking community in the Archdiocese of Singapore and to look into the pastoral needs of the community in spiritual, moral, faith formation in accordance with the teachings of the Catholic Church. The Commission serves as a consultative body to the Senate of Priests and their Spiritual Director in Pastoral matters.

In order that their good work and ministry might be rightfully governed by particular law, I hereby promulgate the Constitution of the Archdiocesan Commission for the Tamil Speaking (ACTS) with immediate effect, and entrust God the continued spiritual growth and development of the Tamil speaking community in Singapore.

*Given from the Archbishop's Office, Singapore, on the 26th of January, 2017.*

THE TITULAR Roman Catholic Archbishop of SINGAPORE

Most Reverend William Goh. DD
Archbishop of Singapore

Seal

Fr John-Paul Tan OFM, JCL
Chancellor

# THE CONTENT


Article 1: Establishment ........ 2

Article 2: Name ........ 2

Article 3: Objectives ........ 2

Article 4: Structure ........ 3

Article 5: Membership ........ 4

Article 6: Election of Office Bearers ........ 7

Article 7: Term and loss of office ........ 8

Article 8: Meeting ........ 8

Article 9: Relationship with other Juridic Persons ........ 9

Article 10: Preachers and celebrants ........ 9

Article 11: Amendment to Constitution ........ 9

Article 12: Dissolution of ACTS ........ 10

# ARCHDIOCESAN COMMISSION FOR TAMIL SPEAKING
# THE CONSTITUTION

## Article 1: Establishment

The Roman Catholic Archbishop of Singapore, in his concern and care for the Tamil Speaking, who may be baptized or otherwise, who have domicile or quasi domicile in the Archdiocese of Singapore church, establishes, the Commission for the Tamil Speaking. The commission is constituted by senate, to look into the pastoral needs of the community, in spiritual, moral, faith formation in accordance with the teachings of the Catholic Church. The commission is to provide activities, that will bond the community through social means. The commission exists, as a consultative body, to the senate and Spiritual Director, in pastoral matters. It strives to discern the movement of the Holy Spirit, among God's people within this community. The community investigates, under the authority of the Spiritual Director, all those things which pertain to pastoral work to ponder them, and to propose practical conclusions about the situation of the Tamil Speaking.

## Article 2: Name

The official name of the committee is **ARCHDICESAN COMMISSION FOR TAMIL SPEAKING**, herewith referred to as **ACTS**.

## Article 3: Objectives

ACTS exists to reach out to the Tamil Speaking who have domicile or quasi domicile in the Archdiocese of Singapore in order to provide for liturgical services, cultural and social activities. These goals will be achieved through the following initiatives:

3:1 Providing the resources in liturgical and para-liturgical services.

3:2 Coordinating the various Tamil communities in the parishes or in the Archdiocese under the umbrella of the commission.

3:3 Organizing various religious services and cultural activities for the Tamil Speaking on different occasions in accordance with Archdiocesan norms and regulations.

3:4 Ministering to the needs of the marginalized Tamil speaking and migrant workers in Singapore.

3:5 Publicizing materials in Tamil concerning the faith and evangelization.

3:6 Assisting other commissions and organizations in translating material into Tamil.

## Article 4: Structure

4:1 The Tamil Speaking Community will be ministered to by the ACTS under the guidance of the Spiritual Director of ACTS who will be appointed by the Archbishop of Singapore.

4:2 ACTS is to set up in parish where possible a community of Tamil Speaking Catholics.

4:3 These communities should develop and organize programmes for the growth of the faith and evangelization in accordance with the Archdiocese vision with guidance of the Spiritual director of ACTS.

4:4 These parish communities are to collaborate with ACTS.

4:5 These parish communities are to submit the names of their respective leaders to ACTS.

4:6 These parish communities are to assist in realizing the vision of ACTS.

4:7 These parish communities are to support collectively initiatives undertaken by ACTS.

4:8 The parish communities will be represented in ACTS by two representatives chosen from amongst members. These two members will have the right to make decisions for their respective parish communities.

4:9 ACTS will set up working committees as the need arises to deal with the pastoral planning, development of pastoral

programmes, improving pastoral services and evaluating the pastoral effectiveness of the various programmes and services.

4:10 All affiliate communities are to ensure that a local or foreign priest or lay, wishing to collect money for any pious purpose does so only with the written permission of the Archdiocesan Finance commission to ensure that the fund-raising activity is in line with the policies of the Archdiocese of Singapore. This permission is to be obtained in writing well in advance, each time these activities are to be carried out.

## Article 5: Membership

### Spiritual Director:

5.1.1 The Spiritual Director is to be a Tamil Speaking priest freely appointed and removed by the Archbishop of Singapore.

5.1.2 The Spiritual Director has the authority over all liturgical, pastoral, and socio-cultural activities of ACTS.

5.1.3 The Spiritual Director is to be present at all ACTS meetings and guides all proposals of the working committees after consultation with the members.

5.1.4 The Spiritual Director is to consult the Vicar General for Pastoral should he disagree with the recommendations of the members.

5.1.5 The Spiritual Director is answerable to the Vicar General for Pastoral.

5.1.6 The Spiritual Director is to have regular dialogue with the parish priests of the parishes that cater to the Tamil Speaking.

### Members:

5.2.1 Members of ACTS will be opened to all Catholics who have domicile or quasi-domicile in Singapore.

5.2.2 Members of ACTS must be members of a parish community.

5.2.3 Each community will be allowed to send only two representatives to ACTS.

5.2.4 A representative should have the ability to study and reflect prayerfully on the situation of the Tamil speaking Catholics in the Archdiocese and recognize and respect the viewpoints of others.

5.2.5 Those proposed for membership to ACTS should be of proven faith with sound Christian morals and willing to commit their time, talent in a consultative and collaborative manner and the ability to commit themselves to the work of ACTS

5.2.6 Members will hold office for a term of two years and can be renewed for another term with the recommendations of the Spiritual Director and approval of the senate.

5.2.7 Should there be a shortage of members, the spiritual director may nominate up to four persons to be members.

## Chairman:

5.3.1 The Chairman is to convene and chair all meetings of ACTS in the presence of the spiritual director and will be responsible to the Spiritual Director.

5.3.2 The Chairman is to ensure that there is a yearly workplan that addresses the objectives of ACTS.

5.3.3 The Chairman is to ensure that all the activities in the yearly workplan are carried out timely.

5.3.4 The Chairman is to prepare an agenda for the meeting after consulting with the Spiritual Director.

5.3.5 The Chairman is to ensure proper order is kept at all meetings.

5.3.6 The Chairman is to be present at all meetings and should he/she not be able to attend the meeting, the Vice-Chairman will convene and direct the meeting.

5.3.7 The Chairman is to represent ACTS at all Archdiocesan meetings and gatherings.

5.3.8 The Chairman is to ensure that all disbursement of funds is done in accordance with the decision taken at the meeting.
5.3.9 The Chairman is to sign on all correspondence made to external organizations.

## Vice-Chairman:

5.4.1 The Vice Chairman chairs all meetings in the absence of the Chairman.
5.4.2 The Vice Chairman is to actively look for new members to join ACTS and should make a report at every meeting of the outcome of such initiatives.

## Secretary:

5.5.1 The Secretary will be elected by the members of ACTS.
5.5.2 The Secretary is to be present at all meetings of ACTS.
5.5.3 The Secretary is to record minutes of all meetings of ACTS and archive the minutes in the ACTS's office.
5.5.4 The Secretary is to prepare agenda for meetings in consultation with the Chairman and Spiritual Director.
5.5.5 The Secretary is to send out minutes of previous meetings to all members not later than a week after that had been concluded.
5.5.6 The Secretary is to send out notice of meeting to all members at least two weeks before any ordinary meeting.
5.5.7 The Secretary is to remind all concerned about actions that are required to be carried out by the respective members.
5.5.8 The Secretary is to ensure good and regular communication between all members of ACTS.

## Treasurer:

5.6.1 The Treasurer will be responsible for all financial matters concerning ACTS.

5.6.2 The Treasurer is to give a statement of account at every meeting of ACTS.
5.6.3 The Treasurer will be one of the signatories of the cheques for ACTS should there be a bank account opened in its name.
5.6.4 The Treasurer is to prepare an annual budget for ACTS and present the actual expenditure of the current year to ACTS in November each year.
5.6.5 The Treasurer is to submit an approved yearly financial report of Archdiocesan Finance Commission.
5.6.6 All account books and bank statements shall be made available to the Spiritual Director upon request.
5.6.7 All funds belonging to ACTS are to be banked into its account. No one is to keep the funds in any other account.
5.6.8 The Treasurer is to ensure that no money is ever loaned to any individual or group within the Archdiocese or out of the Archdiocese.

## Coordinators:

5.7.1 There are to be coordinators to support the work of ACTS in the area of spiritual, youth, social, media, migrants and the elders.
5.7.2 The coordinators are to work closely with the Spiritual Director in fulfilling the vision of objectives of ACTS.

## Article 6: Election of Office Bearers

6.1 Amongst the representatives the Chairman, Vice-Chairman, Secretary, Treasurer, Coordinators will be elected members of ACTS by a secret ballot.
6.2 The representative who has a simple majority will be considered to have been elected to the post.

6.3 The Spiritual Director will initiate the election process and the election will have to be carried out in the presence of the Vicar General for Pastoral.

6.4 The declaration of the outcome of the election will be announced by the Vicar General for Pastoral.

## Article 7: Term and loss of office

7.1 Members will lose their office should their parish priest in writing rejects a member from representing his parish community of the member's contribution to ACTS is lacking and approval to this is given by the Spiritual Director.

7.2 Members may be asked to step down should their attendance be irregular or due to uncharitable behaviour or due to sowing dissention in ACTS.

## Article 8: Meeting

8.1 ACTS will meet on the last Wednesday of the month at the CAEC building or any other venue mentioned in the previous meeting.

8.2 All meetings will begin with prayer and openness to the Holy Spirit, so that the common good will always prevails.

8.3 The members of ACTS are to maintain good order, peace, and harmony at the meetings and during the implementation of its activities.

8.4 No quorum will be required if notification for meeting is given at an opportune time. An opportune time is a minimum of two weeks.

## Article 9: Relationship with other Juridic Persons

9.1 ACTS is called on to establish bonds of fraternal charity and collaboration and maintain a working relationship with the other Catholic organizations in the Archdiocese of Singapore.

## Article 10: Preachers and celebrants

10.1 Recommendation is to be sought from ACTS before a priest, deacon, religious or laity from outside the Archdiocese of Singapore may preach or teach in Tamil in the various communities in Singapore.

10.2 Only after recommendation is given by ACTS can the individual community submit to the Vicar General for pastoral written request for inviting the proposed preacher.

10.3 The local laypersons may not preach or teach or instruct the faithful without the approval of ACTS.

## Article 11: Amendment to Constitution

11.1 The Archbishop of Singapore reserves the exclusive right to amend the Constitution of ACTS.

11.2 Any proposal for the amendment to Constitution of ACTS must be made with a two-third majority of the members agreeing to the amendment working in collaboration with the Spiritual Director. This amendment is then proposed to the Senate of the Archdiocese of Singapore.

11.3 The request for an amendment of the Constitution of ACTS must be made to ACTS in writing three months prior to the meeting called for this purpose. The motion for change is then given to a working committee for discussion and proposal. This agreed proposal is to be voted on and if the members are in agreement, it is then presented to the Senate for approval.

## Article 12: Dissolution of ACTS

12.1 ACTS can be dissolved by the Archbishop of Singapore after consulting with the Senate.

*The constitution was approved by the Archbishop of Singapore, Most Rev William Goh, DD and his Senate on 26 January 2017.*

**********

**ARCHDIOCESAN COMMISSION FOR TAMIL SPEAKING**
Catholic Archdiocesan Education Centre
#03-01A, Highland Road, Singapore 549102
Email: acts.secretariat@catholic.org.sg
Website: acts.catholic.sg

# உள்ளடக்கம்

பகுதி 1: ஆணைய நிறுவனம் ..... 13
பகுதி 2: ஆணையப் பெயர் ..... 13
பகுதி 3: ஆணையக் குறிக்கோள் ..... 13
பகுதி 4: ஆணைய அமைப்பு முறை ..... 14
பகுதி 5: ஆணைய உறுப்பினர்கள் ..... 15
பகுதி 6: ஆணைய செயற்குழுவினர் தேர்தல் ..... 17
பகுதி 7: ஆணையப் பதவி இழத்தல் ..... 19
பகுதி 8: ஆணையக் கூட்டங்கள் ..... 19
பகுதி 9: பிற நிறுவனங்களுடன் உறவு ..... 20
பகுதி 10: பிற அருள்பணியாளர்கள் ..... 20
பகுதி 11: ஆணைய அமைப்பில் திருத்தங்கள் ..... 20
பகுதி 12: ஆணையத்தைக் கலைத்தல் ..... 21

# சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத் தமிழ் ஆணையம் அமைப்பு முறை

# சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத் தமிழ் ஆணையம் அமைப்பு முறை

## பகுதி 1: ஆணைய நிறுவனம்

சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத்தைத் தங்களது முழுமையான அல்லது தற்காலிகமான உறைவிடமாகக் கொண்டத் திருமுழுக்குப் பெற்ற மற்றும் பெறாதத் தமிழ் பேசும் கத்தோலிக்கர் மீது அக்கறையும் பரிவும் கொண்டு, தமிழ் பேசுவோருக்கான இந்த உயர்மறைமாவட்ட ஆணையத்தை சிங்கப்பூரின் உரோமைக் கத்தோலிக்கப் பேராயர் நிறுவினார். கத்தோலிக்கத் திரு அவையின் படிப்பினைகளின்படி ஆன்மீகம், தார்மீகம், நம்பிக்கை உருவாக்கம் ஆகியவற்றில் தமிழ் சமூகத்தினரின் தேவைகளை ஆராய்ந்து பூர்த்தி செய்யப் பேராயரின் மேல் சபையால் இந்த ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இது, சமூக வழிமுறைகளால் தமிழ் சமூகத்தினரை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய வேண்டும். பேராயரின் மேல் சபைக்கும், ஆன்மீக இயக்குனருக்கும், மேய்ப்புப் பணி விவகாரங்களில் ஆலோசனை வழங்கும் அமைப்பாக இந்த ஆணையம் செயல்படும். தமிழ் பேசும் சமூகத்தில் உள்ள இறை மக்களிடையே தூய ஆவியாரின் இயக்கத்தை அறிய இந்த ஆணையம் முயற்சி செய்யும். ஆன்மீக இயக்குனரின் அதிகாரத்தின் கீழ், தமிழ் சமூகத்தினரின் மேய்ப்புப் பணி தொடர்பான அனைத்து விவகாரங்களையும் ஆராய்ந்து சிந்தித்து, தமிழ் பேசுவோரின் நிலை குறித்த நடைமுறை முடிவுகளை பரிந்துரைக்கவும் முன்மொழியவும் இவ்வாணையம் வழி செய்ய வேண்டும்.

## பகுதி 2: ஆணையப் பெயர்

**சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத் தமிழ் ஆணையம்** என்பதே இதன் அதிகாரப்பூர்வ பெயர். இனிமேல் இங்கு இது ஆணையம் எனக் குறிப்பிடப்படும்.

## பகுதி 3: ஆணையக் குறிக்கோள்

சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத்தைத் தங்களது முழுமையான அல்லது தற்காலிகமான உறைவிடமாகக் கொண்டத் தமிழ் பேசுவோரை, வழிபாட்டுச் சேவைகள், கலாச்சார மற்றும் சமூகச் செயல்பாடுகள் வழியாகச் சென்றடைய இந்த ஆணையம் செயல்படும். பின்வரும் முயற்சிகள் வழியாக ஆணையத்தின் குறிக்கோள் அடையப்படும்:

3:1 வழிபாடுகளுக்கும் பக்திமுயற்சிகளுக்கும் தகுந்த வளங்களை வழங்குதல்.

3:2 உயர்மறைமாவட்டத்தின் பங்கு ஆலயங்களிலும், ஆணையத்தின் நிழலின் கீழ் செயல்படும் அனைத்துத் தமிழ் சமூகங்களை ஒருங்கிணைத்தல்.

3:3 தமிழ் பேசுவோரின் நலனுக்காக பல்வேறு வழிபாட்டு நிகழ்ச்சிகளையும் கலாச்சார நடவடிக்கைகளையும் பேராயரின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப ஏற்பாடு செய்தல்.

3:4 சிங்கப்பூரிலுள்ள தமிழ் பேசும் விளிம்பு நிலையில் உள்ளோர் மற்றும் புலம்பெயர்ந்தத் தொழிலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

3:5 மறைபரப்புதல் மற்றும் நம்பிக்கை உருவாக்கம் பற்றியத் தகவல்களை தமிழ் பேசுவோரிடையே விளம்பரப்படுத்துதல்.

3:6 ஆணையங்களுக்கும் நிறுவனங்களுக்கும் தேவைப்படும் விபரங்களைத் தமிழில் மொழிபெயர்க்க உதவுதல்.

## பகுதி 4: ஆணைய அமைப்பு முறை

4:1 உயர்மறைமாவட்டப் பேராயரால் நியமிக்கப்படும் ஆணையத்தின் ஆன்மீக இயக்குனரின் வழிகாட்டுதலின்படி தமிழ் பேசும் சமூகத்தினருக்காக இந்த ஆணையம் செயல்படும்.

4:2 தமிழ் பேசும் கத்தோலிக்கர்களைக் கொண்ட உயர்மறைமாவட்டத்தின் பங்கு ஆலயங்களில் ஆணையம் பணிக்குழு ஒன்றை அமைக்க உதவும்.

4:3 இவ்வாறு உருவாக்கப்பட்ட ஆலயப் பணிக்குழுக்கள் ஆணையத்தின் ஆன்மீக இயக்குனரின் வழிகாட்டுதலுடன், உயர்மறைமாவட்டத்தின் குறிக்கோள்களுக்கு இணங்க, மறைபரப்புதல் மற்றும் நம்பிக்கை உருவாக்க வளர்ச்சிக்கானத் திட்டங்களைச் செயல்படுத்தும்.

4:4 இந்த ஆலயப் பணிக்குழுக்கள் ஆணையத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

4:5 இந்த ஆலயப் பணிக்குழுக்கள் தங்களது செயல் குழு உறுப்பினர்களின் பெயர்களை ஆணையத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

4:6 இந்த ஆலயப் பணிக்குழுக்கள் ஆணையத்தின் குறிக்கோள்களை நிறைவேற்ற உதவி செய்ய வேண்டும்.

4:7 இந்த ஆலயப் பணிக்குழுக்கள் ஆணையம் மேற்கொள்ளும் அனைத்துக் கூட்டு முயற்சிகளுக்கும் ஆதரவளிக்க வேண்டும்.

4:8 இந்த ஆலயப் பணிக்குழுக்கள் தங்களது செயல் குழு உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருவரை ஆணையப் பிரதிநிதிகளாக அனுப்ப வேண்டும். இவ்விரு உறுப்பினர்களுக்கும் தங்கள் ஆலயப் பணிக்குழுவுக்கான முடிவுகளை எடுக்க உரிமை இருக்க வேண்டும்.

4:9 மேய்ப்புப் பணிகள் திட்டமிடல், மேய்ப்புப் பணி மேம்பாட்டுத் திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள், பல்வேறு சமூக நலத் திட்டங்கள், நடவடிக்கைகள், செயல்பாடுகள் போன்றவற்றிக்குத் தேவைப்படும் பணிக்குழுக்களை ஆணையம் அமைக்கும்.

4:10 ஆணையத்தோடு இணைந்துள்ள அனைத்து ஆலயப் பணிக்குழுக்களும், உள்ளூரையோ வெளிநாட்டையோ சார்ந்த அருள் பணியாளரோ பொது நிலையினரோ, எந்த வித நோக்கத்திற்காகவும் நிதி திரட்டும் நடவடிக்கைளில் ஈடுபடுவதற்கு முன்னர், ஒவ்வொரு முறையும் அந்த நடவடிக்கை சிங்கப்பூர் உயர்மறைமாவட்ட கொள்கைகளுக்கும் விதிமுறைகளுக்கும் ஏற்ப உள்ளதா என நமது உயர்மறைமாவட்ட நிதி ஆணையத்தோடு எழுத்துப்பூர்வமாக உறுதி செய்து, அனுமதி பெற்ற பின்னரே நடவடிக்கையைத் தொடங்க வேண்டும். ஒவ்வொரு முறையும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது, இந்த அனுமதி எழுத்துப்பூர்வமாக முன்கூட்டியே பெறப்பட வேண்டும்.

## பகுதி 5: ஆணைய உறுப்பினர்கள்

### ஆன்மீக இயக்குனர்:

5.1.1 சிங்கப்பூரிலுள்ள தமிழ் பேசும் ஒரு அருள் பணியாளரை இந்த ஆணையத்தின் ஆன்மீக இயக்குனராக நியமிக்கவும் நீக்கவும் சிங்கப்பூர் உயர்மறைமாவட்டப் பேராயருக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது.

5.1.2 ஆணையத்தின் அனைத்து வழிபாட்டு, மேய்ப்புப் பணி மற்றும் சமூகக் கலாச்சார நடவடிக்கைகள் மீதும் ஆன்மீக இயக்குனருக்கு முழு அதிகாரம் உள்ளது.

5.1.3 ஆன்மீக இயக்குனர், ஆணையத்தின் அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு, எல்லா உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்துப் பின், பணிக்குழுக்களின் அனைத்துப் பரிந்துரைகளுக்கும் வழிகாட்ட வேண்டும்.

5.1.4 ஆணைய உறுப்பினர்கள் கூறும் பரிந்துரைகளுக்கு ஆன்மீக இயக்குனர் உடன்படவில்லை என்றால், அவர் மேய்ப்புப் பணிக்கானப் பேராயரின் முதன்மை குருவோடு கலந்தாலோசிக்க வேண்டும்.

5.1.5 ஆன்மீக இயக்குனர், மேய்ப்புப் பணிக்கானப் பேராயரின் முதன்மை குருவுக்குக் கட்டுப்பட்டவர்.

5.1.6 ஆன்மீக இயக்குனர், தமிழ் பேசும் கத்தோலிக்கர்களைக் கொண்ட உயர் மறைமாவட்டப் பங்கு குருக்களுடன் எப்போதும் தொடர்ந்து உரையாடலில் இருக்க வேண்டும்.

### உறுப்பினர்கள்:

5.2.1 சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத்தைத் தங்களது முழுமையான அல்லது தற்காலிகமான உறைவிடமாகக் கொண்ட அனைத்துக் கத்தோலிக்கர்களும் ஆணைய உறுப்பினராகலாம்.

5.2.2 ஆணைய உறுப்பினர்கள் ஒரு பங்கு ஆலயப் பணிக்குழுவின் உறுப்பினராக இருக்க வேண்டும்.

5.2.3 ஒவ்வொரு ஆலயப் பணிக்குழுவும் ஆணையப் பிரதிநிதிகளாக இருவரை மட்டுமே அனுப்ப முடியும்.

5.2.4 இந்தப் பிரதிநிதிகள் சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத்திலுள்ள தமிழ் பேசும் கத்தோலிக்கர்களின் நிலையை ஆன்மீக வழியில் அறிந்து சிந்திக்கவும், பிறரின் கருத்துகளை அங்கீகரித்து மதிக்கவும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

5.2.5 ஆணைய உறுப்பினராக முன்மொழியப்பட்டவர்கள், ஆழமான நம்பிக்கையும் கிறிஸ்தவக் கோட்பாடுகளை உறுதியாக கடைப்பிடித்து, தங்களது நேரத்தையும் திறமையையும் ஆணைய நடவடிக்கைகளுக்காக அர்ப்பணித்து, ஆலோசனை வழங்கவும் ஒருங்கிணைந்து செயல்படவும் தயாராக இருக்க வேண்டும்.

5.2.6 ஆணைய உறுப்பினர்கள் இரண்டு ஆண்டு காலம் பதவியில் இருப்பார்கள். மேலும், ஆன்மீக இயக்குனரின் பரிந்துரைப்படி மேல் சபையின் ஒப்புதலோடு மீண்டும் இரண்டு ஆண்டு காலத்திற்குப் புதுப்பிக்கப்படலாம்.

5.2.7 உறுப்பினர்கள் பற்றாக்குறை இருந்தால், ஆன்மீக இயக்குனர் நான்கு நபர்களை உறுப்பினர்களாக நியமிக்கலாம்.

## தலைவர்:

5.3.1 ஆன்மீக இயக்குனரின் கீழ் செயல்படும் ஆணையத் தலைவர், அவருடைய முன்னிலையில் ஆணையத்தின் அனைத்துக் கூட்டங்களையும் கூட்டித், தலைமை தாங்கி வழிநடத்த வேண்டும்.

5.3.2 ஆணைய நோக்கங்களைக் குறிக்கும் வருடாந்திர வேலைத் திட்டம் ஒன்று இருப்பதை தலைவர் உறுதி செய்ய வேண்டும்.

5.3.3 அந்த வருடாந்திர வேலைத் திட்டத்தின்படி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதை தலைவர் உறுதி செய்ய வேண்டும்.

5.3.4 தலைவர் ஆன்மீக இயக்குனருடன் கலந்தாலோசித்த பிறகு கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க வேண்டும்.

5.3.5 தலைவர் அனைத்து கூட்டங்களிலும் சரியான ஒழுங்குமுறைகளைப் பராமரிக்க வேண்டும்.

5.3.6 தலைவர் அனைத்து கூட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டும். அப்படிக் கலந்து கொள்ள முடியாத வேளைகளில், துணைத் தலைவர் கூட்டத்தை வழிநடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

5.3.7 தலைவர் அனைத்து உயர்மறைமாவட்டக் கூட்டங்களில் ஆணையத்தைப் பிரதிநிதிக்க வேண்டும்.

5.3.8 கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி அனைத்து நிதி வழங்குதல்களும் பூர்த்தியானதை உறுதி செய்ய வேண்டும்.

5.3.9 மற்ற அமைப்புகளோடும் நிறுவனங்களோடும் மேற்கொள்ளப்படும் தொடர்புகளில் தலைவர் கையெழுத்திட வேண்டும்.

## துணைத் தலைவர்:

5.4.1 தலைவர் பங்கேற்க முடியாத அனைத்து கூட்டங்களையும் துணைத் தலைவர் தலைமை தாங்கி வழிநடத்த வேண்டும்.

5.4.2 ஆணையத்திற்குப் புதிய உறுப்பினர்களை சேர்க்கத் தீவிரமான முயற்சிகளைத் துணைத் தலைவர் எடுக்க வேண்டும். அத்தகைய முயற்சிகளின் விளைவுகளைப் பற்றி ஒவ்வொரு கூட்டத்திலும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

## செயலாளர்:

5.5.1 செயலாளர் ஆணைய உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

5.5.2 ஆணையத்தின் அனைத்துக் கூட்டங்களிலும் செயலாளர் கலந்து கொள்ள வேண்டும்.

5.5.3 செயலாளர் ஆணையத்தின் அனைத்து கூட்டறிக்கைகளையும் பதிவு செய்து, உறுதி செய்து, ஆணைய அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

5.5.4 கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலை ஆன்மீக இயக்குனரோடும் தலைவரோடும் கலந்தாலோசித்து, செயலாளர் தயாரிக்க வேண்டும்.

5.5.5 முந்தையக் கூட்டங்களின் கூட்டறிக்கைகளை, கூட்டம் முடிந்த ஒரு வாரத்திற்குள் அனைத்து உறுப்பினர்களுக்கும் செயலாளர் அனுப்ப வேண்டும்.

5.5.6 எந்தவொரு சாதாரண கூட்டத்திற்கும் குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு முன்னதாகக் கூட்டத்திற்கான அறிவிப்பை அனைத்து உறுப்பினர்களுக்கும் செயலாளர் அனுப்ப வேண்டும்.

5.5.7 அந்தந்த உறுப்பினர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களைச் செயலாளர் நினைவூட்ட வேண்டும்.

5.5.8 ஆணையத்தின் அனைத்து உறுப்பினர்களுக்குமிடையே வழக்கமான நல்ல தகவல் தொடர்பு இருப்பதை செயலாளர் உறுதி செய்ய வேண்டும்.

# சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத் தமிழ் ஆணையம் அமைப்பு முறை

## பொருளாளர்:

5.6.1 ஆணையம் தொடர்பான அனைத்து நிதித் தேவைகளுக்கும் பொருளாளர் பொறுப்பேற்பார்.

5.6.2 ஆணையத்தின் ஒவ்வொரு கூட்டத்திலும் பொருளாளர் தற்போதைய நிலை குறித்தக் கணக்கறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5.6.3 ஆணையத்தின் பெயரில் வங்கிக் கணக்கு ஒன்று தொடங்கப்பட்டிருந்தால் அதன் காசோலைகளில் கையொப்பமிடுபவர்களில் ஒருவராகப் பொருளாளர் இருக்க வேண்டும்.

5.6.4 பொருளாளர் ஆணையத்தின் நடப்பு ஆண்டின் உண்மையான வரவு~செலவு நிலவரத்தையும், அடுத்த ஆண்டுக்கான வரவு~செலவுத் திட்டத்தையும் தயாரித்து, நவம்பர் மாத ஆணையக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

5.6.5 ஆணையத்தின் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர நிதி அறிக்கையை பொருளாளர் உயர்மறைமாவட்ட நிதி ஆணையத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

5.6.6 தேவைப்படும் போது அனைத்து கணக்குப் புத்தகங்களையும் வங்கிக் கணக்கு அறிக்கைகளையும் பொருளாளர் ஆன்மீக இயக்குனரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

5.6.7 ஆணையத்திற்குச் சொந்தமான அனைத்து நிதிகளும் அதன் வங்கிக் கணக்கில் உடனடியாகச் செலுத்தப்பட வேண்டும். வேறு எந்தக் கணக்கிலும் பணத்தை வைக்க எவருக்கும் அனுமதி இல்லை.

5.6.8 உயர்மறைமாவட்டத்திற்கு உள்ளேயோ வெளியேயோ, எந்தவொரு குழுவிற்கோ தனிநபருக்கோ ஆணையத்தின் பணம் கடனாக வழங்கப்படாமல் இருப்பதைப் பொருளாளர் உறுதி செய்ய வேண்டும்.

## ஒருங்கிணைப்பாளர்கள்:

5.7.1 ஆன்மிகம், இளைஞர்கள், சமூகம், ஊடகங்கள், புலம்பெயர்ந்தோர், முதியோர் போன்றத் துறைகளில் ஆதரவளிக்கும் பணிகளுக்கு ஏற்றபடித் தகுந்த ஆணைய ஒருங்கிணைப்பாளர்கள் இருக்க வேண்டும்.

5.7.2 இந்த ஒருங்கிணைப்பாளர்கள் ஆணையக் குறிக்கோளையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதில் ஆன்மீக இயக்குனருடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும்.

## பகுதி 6: ஆணைய செயற்குழுவினர் தேர்தல்

6.1 ஆணைய உறுப்பினர்களிலிருந்து, இரகசிய வாக்கெடுப்பு வழியாக தலைவர், துணைத் தலைவர், செயலாளர், பொருளாளர், ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

6.2 வாக்கெடுப்பில் தனிப்பெரும்பான்மை பெற்றப் பிரதிநிதியே அவர் போட்டியிட்டப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவார்.

6.3 மேய்ப்புப் பணிக்கானப் பேராயரின் முதன்மை குருவின் முன்னிலையில் ஆன்மீக இயக்குனர் பதவிகளுக்கான வாக்கெடுப்பைத் தொடக்கி வைப்பார்.

6.4 மேய்ப்புப் பணிக்கானப் பேராயரின் முதன்மை குரு வாக்கெடுப்பின் முடிவுகளை அறிவிப்பார்.

## பகுதி 7: ஆணையப் பதவி இழத்தல்

7.1 ஆணைய உறுப்பினர் ஒருவரின் சரியான பங்களிப்பின்மையால் தனது ஆலயப் பணிக்குழுவைப் பிரதிநிதிப்பதிலிருந்து தடைசெய்யப்படுவதாக அவரது பங்கு குரு எழுத்துப்பூர்வமாக விண்ணப்பம் செய்தால், ஆன்மீக இயக்குனரின் ஒப்புதலோடு அவரை ஆணையத்தின் பதவியிலிருந்து நீக்கிவிடலாம்.

7.2 வருகை ஒழுங்கற்றதாக இருப்பதாலோ, அறமற்ற நடத்தையினாலோ, ஆணைய உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகளை விதைப்பதாலோ ஆணைய உறுப்பினர் ஒருவரைப் பதவியிலிருந்து விலகுமாறு வலியுறுத்தப்படலாம்.

## பகுதி 8: ஆணையக் கூட்டங்கள்

8.1 ஆணைய அலுவலகத்திலோ அல்லது முந்தையக் கூட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஒரு இடத்திலோ, மாதத்தின் கடைசிப் புதன்கிழமை அன்று ஆணையத்தின் மாதாந்திரக் கூட்டம் நடைபெறும்.

8.2 பொது நலன் எப்போதும் மேலோங்கும் வகையில் அனைத்துக் கூட்டங்களும், தூய ஆவியாரின் செயல்பாட்டுக்கு நமது மனதைத் திறந்துவிடும் வகையில், செபத்தோடு தொடங்கப்படும்.

8.3 ஆணைய உறுப்பினர்கள் அதன் கூட்டங்களிலும், அதன் நடவடிக்கைகளிலும் நல்லொழுக்கத்தையும், அமைதியையும், நல்லிணக்கத்தையும் எப்போதும் பேணிக் காக்க வேண்டும்.

8.4 மாதாந்திரக் கூட்டத்திற்கான அறிவிப்பு அனைவருக்கும் சாதாகமான நேரத்தில் இருக்குமென்றால் குறைந்தப்பட்ச வருகைக்கு அவசியமில்லை. சாதாகமான நேரம் என்பது குறைந்தப்பட்சம் இரண்டு வாரங்கள்.

## பகுதி 9: பிற நிறுவனங்களுடன் உறவு

9.1 சகோதரத்துவப் பிறரன்பையும் ஒத்துழைப்பின் பிணைப்புகளையும் நிறுவுவதற்கும் சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத்திலுள்ள மற்றக் கத்தோலிக்க அமைப்புகளுடன் இணைந்துப் பணிபுரிந்து உறவைப் பேணி மேம்படுத்தவும் ஆணையம் அழைக்கப்பட்டுள்ளது.

## பகுதி 10: பிற அருள்பணியாளர்கள்

10.1 சிங்கப்பூர் உயர்மறைமாவட்டத்திற்கு வெளியிலிருந்து வருகை புரியும் அருள் பணியாளர்களோ பொதுநிலையினரோ சிங்கப்பூரிலுள்ள பல்வேறு சமூகங்களில் தமிழில் மறையுரையாற்றவோ கற்பிக்கவோ ஆணையத்தின் பரிந்துரையை முதலில் பெற்றிருக்க வேண்டும்.

10.2 ஆணையத்தின் பரிந்துரையைப் பெற்றப் பின்னரே, அந்தத் தனிப்பட்டச் சமூகம் முன்மொழிந்த நபரைச் சிங்கப்பூருக்கு அழைப்பதற்கான எழுத்துப்பூர்வமான விண்ணப்பத்தை மேய்ப்புப் பணிக்கானப் பேராயரின் முதன்மை குருவிடம் சமர்ப்பிக்க முடியும்.

10.3 ஆணைய ஒப்புதலின்றி உள்ளூரிலுள்ள எந்தப் பொதுநிலையினரும் இங்குள்ள விசுவாசிகளுக்கு மறையுரையாற்றவோ கற்பிக்கவோ அறிவுறுத்தவோ கூடாது.

## பகுதி 11: ஆணைய அமைப்பில் திருத்தங்கள்

11.1 ஆணையத்தின் அமைப்பு முறையைத் திருத்துவதற்கானத் தனிப்பட்ட உரிமை சிங்கப்பூர் உயர்மறைமாவட்டப் பேராயருக்கு மட்டுமே உண்டு.

11.2 ஆணைய அமைப்பு முறையைத் திருத்துவதற்கான எந்தவொரு முன்மொழிவும் ஆன்மீக இயக்குனருடன் இணைந்து செயல்படும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மையுடன் முன்மொழியப்பட வேண்டும். இந்தத் திருத்தங்கள் சிங்கப்பூர் உயர்மறைமாவட்ட மேல் சபையில் முன்மொழியப்பட்டு அனுமதி பெற வேண்டும்.

11.3 ஆணைய அமைப்பு முறையைத் திருத்துவதற்கான விண்ணப்பம், இந்த நோக்கத்திற்காக அழைக்கப்பட்டக் கூட்டத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன், ஆணையத்திற்கு எழுத்துப்பூர்வமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதைப் பற்றி விவாதிக்கவும் முன்மொழியவும் ஒரு செயல் குழுவிடம் திருத்தத்திற்கான ஆணை வழங்கப்படும். செயல் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டத் திருத்தங்கள் குறித்து அனைத்து உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற வாக்கெடுப்பு நடத்தப்பட்டு,

உறுப்பினர்கள் உடன்பட்டால், அது சிங்கப்பூர் உயர்மறைமாவட்ட மேல் சபையின் ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

## பகுதி 12: ஆணையத்தைக் கலைத்தல்

12.1 சிங்கப்பூர் உயர்மறைமாவட்டப் பேராயர் அவர்கள் தனது மேல் சபையோடு கலந்தாலோசித்து எடுத்த முடிவின்படி இந்த ஆணையம் கலைக்கப்படலாம்.

*இந்த ஆணைய அமைப்பு முறை சிங்கப்பூர் உயர்மறைமாவட்டப் பேராயர் மேதகு. வில்லியம் கோ அவர்களால் 26-01-2017 அன்று அங்கீகரிக்கப்பட்டது.*

**********

**ARCHDIOCESAN COMMISSION FOR TAMIL SPEAKING**

Catholic Archdiocesan Education Centre
#03-01A, Highland Road, Singapore 549102
Email: acts.secretariat@catholic.org.sg
Website: acts.catholic.sg

**ARCHDIOCESAN COMMISSION FOR TAMIL SPEAKING**

*Catholic Archdiocesan Education Centre*
*#03-01A, Highland Road, Singapore 549102.*
*Email: acts.secretariat@catholic.org.sg*
*Website: acts.catholic.sg*

ACTS

# Tamil Masses in the Archdiocese of Singapore

| | |
|---|---|
| Church of Our Lady of Lourdes<br>50 Ophir Road | Mass on all Sundays at<br>9:30am, 5:00pm & 6:30pm |
| Church of St. Francis of Assisi<br>200 Boon Lay Avenue | 1st, 2nd, 3rd, 5th Sundays at 7:30pm<br>4th Saturday at 8:00pm |
| St. Anne's Church<br>66 Senkang East Way | 4th Sunday of the month<br>at 2:00pm |
| Church of the Risen Christ<br>91 Toa Payoh Central | 2nd Sunday of the month<br>at 4:00pm |
| Church of St. Anthony<br>25 Woodlands Avenue 1 | 1st & 2nd Saturday of the month<br>at 7:30pm |
| Church of Our Lady Star of the Sea<br>10 Yishun Street 22 | 3rd Saturday of the month<br>at 6:30pm |
| Blessed Sacrament Church<br>1 Commonwealth Drive | 1st & 3rd Saturdays of the month<br>at 7:30pm |
| Church of St. Mary of the Angels<br>5 Bukit Batok East Avenue 2 | All Saturdays<br>at 8:00pm |
| Church of Christ the King<br>2221 Ang Mo Kio Avenue 8 | NO TAMIL MASS |
| Church of the Holy Trinity<br>20 Tampines Street 11 | NO TAMIL MASS |